**பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கல் ஆணை**

**நாகப்பட்டினம், அரசு மருத்துவக் கல்லூரி , முதல்வர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை:மரு.ஆர்.செந்தில்நாதன், M.S.MCh.,**

செ.மு.ஆ.எண்:2189/நி2/2023-5

நாள்: .11.2024.

பொருள்: பணியாளர் - தமிழ்நாடு சார்நிலைப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழி பணி அமர்வு - **செல்வி. சி.அஸ்வினி** , இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி, நாகப்பட்டினம்- பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்குதல் - ஆணையிடுதல்.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை, அவர்களின் கடித எண்:1960/PSD-D2/2023, நாள்:02.09.2023.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்(பொ), சென்னை–6,அவர்களின் ந.க.எண்:56867/நி2/2/2023 நாள்:21.09.2023(ம)07.10.2023.
3. இயக்குநர், மருத்துவக்கல்வி (ம) ஆராய்ச்சி இயக்ககம், சென்னை-10, அவர்களின் ந.க.எண்:93355/நி2/5/2023, நாள்:22.09.2023(ம)13.10.2023.
4. முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, நாகப்பட்டினம் அவர்களின் பணி நியமன ஆணை எண்:2189/நி2/2023, நாள்:16.10.2023.

********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் Group IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி செயல்முறையில் பணியமர்வு செய்யப்பட்ட **செல்வி. சி.அஸ்வினி** அவர்களின் கல்வித் தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மைத்தன்மை மற்றும் உடற்தகுதிச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016-ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் **18.10.2023** மு.ப. முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பத்தி 1-ல் ஆணையிடப்பட்ட பணிவரன்முறையினை தொடர்ந்து செல்வி. சி.அஸ்வினி அவர்களுக்கு **18.10.2023** மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி செல்வி. சி.அஸ்வினி அவர்கள் **18.10.2023** மு.ப. முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

Scanned with OKEN Scanner

தகுதிகாண் பருவக் காலத்தில் மேற்படி தனியர், கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. மருத்துவக் குறியீடு (Medical Code)
2. பவானிசாகர்அடிப்படை பயிற்சி **(Bhavanisagar Training)**

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், நிலுவையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய Group IV தேர்வு தொடர்பான வழக்குகளின் தீர்ப்பாணைக்கு உட்பட்டதாகும்.

1-2 11/11/24

முதல்வர்
அரசு மருத்துவக்கல்லூரி
நாகப்பட்டினம்.

11/11/24.

பெறுநர்
செல்வி. சி.அஸ்வினி,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி, நாகப்பட்டினம்- உரிய வழியாக.

நகல்
பணிப்பதிவேட்டிற்கு - 1

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை – 6.
2. இயக்குநர், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், கீழ்ப்பாக்கம், சென்னை-10.
உதிரி - 1

Scanned with OKEN Scanner